

தஞ்சாவூர் மாவட்டம் திருப்பனந்தாள் மேற்கு சன்னதி தெருவில் கூரை வீடு சேதமடைந்த திருமதி.சின்ன பொண்ணு, க/பெ. கண்ணையா என்பவருக்கு நிவாரண உதவித்தொகை மற்றும் பொருட்களை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், திருப்பனந்தாள் பேரூர் செயலாளர் டி.சப்பாணி பலர் உடன் உள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை காடம்பாடி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன், மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ், நாகை சட்டமன்ற உறுப்பினர் தஜெ.முகம்மது ஷா நவாஸ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் தவி.பி.நாகை மாலி, நாகை நகர் மன்ற தலைவர் இரா மாரிமுத்து, துணைத்தலைவர் எம்.ஆர்.செந்தில்குமார் உள்ளனர்.

### பயனடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

# தொழிலாளர் நலனுக்கான ஒன்றிய அரசின் திட்டங்கள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, நவ. 30 –

ஒன்றிய அரசின் தொழிலாளர் நலனுக்காக மத்திய திட்டங்களில் செலவு மற்றும் பயனீட்டாளர் விவரம் குறித்து ஒன்றிய அரசிடம் வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவரது கேள்விகள் வருமாறு :–

கடந்த ஐந்தாண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் தமிழ்நாடு உட்பட தொழிலாளர் நலனுக்காக ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய நிதியுதவி திட்டங்கள் மற்றும் மத்தியத் துறைத் திட்டங்களின் விவரங்கள் யாவை?

ஒதுக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் மற்றும் கடந்த ஐந்து வருடங்கள் மற்றும் நடப்பு காலத்தில் மேற்கண்ட ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆண்டு வாரியாக, திட்ட வாரியாக மற்றும் மாவட்ட வாரியாக விவரம் தருக.

மேற்கூறிய காலக்கட்டத்தில் தமிழ்நாடு உட்பட மேற்கண்ட திட்டங்களின் மூலம் பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

தொழிலாளர்களுக்கான இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும்போது எதிர்கொள்ளும் சவால்களை ஒன்றிய அரசாங்கம் ஆய்வு செய்து ஆவணப்படுத்தியிருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள்;

நாட்டில் உள்ள தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்த மாநில அரசுகளுக்கு போதுமான நிதி உதவியை வழங்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் எழுப்பிய கேள்விகளுக்கு ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக்கான ராஜாங்க அமைச்சர் ஷோபா கரண்ட்லாஜே எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு :–

ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் திட்டங்கள் மத்தியத் துறை திட்டங்களாகும். செயல்படுத்தப்படும் முக்கிய நலத்திட்டங்கள்

(i) பீடி / சினிமா / நிலக்கரி அல்லாத சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்கான தொழிலாளர் நலத்திட்டம் (LWS) மூன்று கூறுகளை உள்ளடக்கியதாகும். சுகாதாரம், உதவித்தொகை மற்றும் வீட்டுவசதி;

(ii) ஆத்மநிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா (ABRY) கோவிட் – 19 தொற்றுநோய்களின் போது புதிய வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும் வேலை இழப்பை மீட்டெடுப்ப தற்கும் முதலாளிகளை ஊக்குவிக்கிறது;

(iii) மாதிரி தொழில் மையங்களை (MCCs) நிறுவுவதற்கான தேசிய தொழில் சேவை (NCS)

(iv) ஊழியர்களின் ஓய்வூதியத் திட்டம் (EPS), 1995 EPFO மூலம் செயல்படுத்தப்பட்டது.

(v) பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் (PMSYM), முதியோர் ஓய்வூதியத்திற்காக இந்திய அரசாங்கத்தின் பங்களிப்புடன் ஒத்துப்போகும் தன்னார்வ பங்களிப்புத் திட்டம்;

(vi) கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு புனர்வாழ்வளிக்க கொத்தடிமைத் தொழிலாளர்களின் மறுவாழ்வு;

(vii) பணியாளர்கள் மாநில காப்பீட்டு கழகம் மூலம் சுகாதார சேவைகள்.

தமிழ்நாடு அரசு உட்பட முக்கிய நலத் திட்டங்களின் கீழ் செலவின விவரங்கள் மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

மாநில அரசுகள் மூலம் விழிப்புணர்வு மற்றும் பயனாளிகளை அணிதிரட்டுதல் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள சவால்கள், மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன், விழிப்புணர்வு முகாம்களை ஏற்பாடு செய்தல், சேர்க்கையை எளிதாக்குதல் போன்றவற்றின் மூலம் தீர்க்கப்படுகின்றன.

1. பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மந்தன் (PM-SYM) ஓய்வூதியத் திட்டம்

2020–21ல்– ரூ . 319.71 கோடிகள்
2021–22ல்–ரூ. 324.23 கோடிகள்
2022–23ல்–ரூ. 269.91 கோடிகள்
2023–24ல்– ரூ. 162.51 கோடிகள்
2024–25
(20.11.2024 அன்று வரை)
ரூ. 95.18 செலவு செய்யப்பட்டது.

20.11.2024 நிலவரப்படி, தமிழ்நாடு மாநிலத்தில் 68.641 பயனாளிகள் உட்பட PMSYM திட்டத்தின் கீழ் 50 லட்சத்திற்கும் அதிகமான பயனாளிகள் மாந்தன் போர்ட்டலில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

2. தொழிலாளர் நலத்திட்டம் (LWS):

2019–20 – ரூ. 53.66 கோடி
2020–21 – ரூ. 86.25 கோடி
2021–22 – ரூ. 64.21 கோடி
2022–23 – ரூ. 80.79 கோடி
2023–24 – ரூ. 81.31 கோடி

3. கடந்த ஐந்தாண்டுகளில் மொத்தப் பயனாளிகள் 96,08,540, இவர்களில் தமிழகப் பகுதியிலிருந்து மட்டும் 15 இலட்சத்து 22 ஆயிரத்து 782 பயனாளிகள் உள்ளனர்.

தேசிய தொழில் சேவை (NCS):

2019–20 – ரூ.63.93 கோடி
2020–21 – ரூ. 43.80 கோடி
2021–22 – ரூ. 24.30 கோடி
2022–23 – ரூ. 43.99 கோடி
2023–24 – ரூ. 46.90 கோடி
2024–25 – ரூ. 24.25 கோடி
(15.11.2024 அன்று வரை)
செலவு செய்யப்பட்டது

மேற்கண்ட நிதியாண்டுகளில் (நவம்பர் 15, 2024 வரை) NCS இன் கீழ் வேலை தேடுபவர்கள் / பயனாளிகள் 3,70,18,111, அவர்களில் 13,83,407 பேர் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ளனர்.

ஆத்மநிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா (ABRY):

2020–21 – ரூ.351.08 கோடி
2021–22 – ரூ. 4046.44 கோடி
2022–23 –ரூ. 4593.08 கோடி
2023–24 – ரூ. 1197.89 கோடி
வழங்கப்பட்டது

31.3.2024 நிலவரப்படி, மொத்த பயனாளிகள் 60.49 லட்சம், அவர்களில் 8.05 லட்சம் பயனாளிகள் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ளனர்.

6. கொத்தடிமைத் தொழிலாளர் திட்டத்தின் மறுவாழ்வு:

பணியாளர்கள் மாநில காப்பீட்டுக் கழகம் (ESIC): ESIC திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மாநிலத்தில், 11 மருத்துவமனைகள் (3 ESIC மற்றும் 8 ESIS) உள்ளன மற்றும் 241 மருந்தகங்கள் மற்றும் 7 புதிய மருத்துவமனைகளுக்கு கொள்கை ரீதியான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 43,77,090 காப்பீட்டு நபர்கள் உள்ளனர்.

இந்தத் திட்டமானது, மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் இருந்து முன்மொழிவுகளைப் பெற்றவுடன், அவர்களுக்கு நிதி அளிக்கப்படும் கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டது. பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் மறுவாழ்வுக்காக விடுவிக்கப்பட்ட தொகை விவரங்கள்

சமீப ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத்தில் பின்வருமாறு : –

கொத்தடிமைத் தொழிலாளியின் எண்

தமிழ் நாடு மாநிலத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்

2021–22 – ரூ. 1016
2022–23 – ரூ. 29
2023–24 – ரூ.176
2024–25 – ரூ. 03

விடுவிக்கப்பட்ட தொகை

பிணைக்கப்பட்டவர்களின் மறுவாழ்வு தொழிலாளி (ரூ. லட்சங்களில்).

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் விளக்கமளித்தார்.



### 300க்கும் மேற்பட்ட இ-சேவைகளை கிராம மக்கள் பெறும் வகையில்

# தமிழகத்தில் உள்ள 4,453 வேளாண் கடன் சங்கங்கள் பொதுசேவை மையங்களாகவும் செயல்படும்!

## டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பதில்!

புதுடெல்லி, நவ.30-

தமிழகத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? அந்த சங்கங்களை பொதுமக்கள் சேவை மையமாக மாற்ற எடுத்த நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித்ஷா அளித்த பதில்:

கிராமப் புறங்களில் இயங்கும் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக நாட்டிலுள்ள 67,930 வேளாண் கடன் சங்கங்களை கணினிமயமாக்கி ஒருங்கிணைக்கும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.

தேசிய அளவில் உருவாக்கப்பட்டுள்ள பொதுவான மென்பொருள் மூலம் நடக்கும் இந்தப் பணிகள் முழுமை அடைந்தால், இந்த சங்கங்களின் செயல்திறன் பல மடங்கு அதிகரிக்கும். விரைவாக கடன் வழங்குதல், குறைந்த சேவைக் கட்டணம், பணம் கையாள்வதில் வெளிப்படைத்தன்மை போன்ற நன்மைகளை இதன் மூலம் பெற முடியும்.

வேளாண் கடன் சங்கங்கள், தங்களின் வர்த்தகத்தை விரிவுபடுத்தும் வகையில் பால் பண்ணை, மீன் பிடித்தல், பூக்கள் சாகுபடி, கிட்டங்கிகள் அமைப்பது, உணவு தானியங்கள், விதைகள் மற்றும் உரங்கள் கொள்முதல் போன்ற

பொருளாதாரத்தை மையப்படுத்திய இருபத்தைந்துக்கும் அதிகமான செயல்பாடுகளை கையாளும் வகையில் சங்க விதிகள் திருத்தி அமைக்கப்படும்.



பிரதமரின் விவசாயத் தகவல் மற்றும் விவசாயப் பொருட்கள் மையத் திடத்தின்படி, விவசாயிகளுக்கு விதைகள், உரம், பூச்சிக் கொல்லி போன்ற பொருட்களை வழங்கும் மையமாகவும், பிரதமரின் மக்கள் மருந்தகம் திட்டத்தின் கீழ் கிராமப்புர மக்களுக்கு குறைந்த விலையில் மருந்து, மாத்திரைகள் வழங்கும் மையங்களாகவும் இந்த வேளாண் சங்கங்கள் செயல்பட இருக்கின்றன.

அத்துடன், வங்கிப் பரிவர்த்தனை, ஆயுள் காப்பீடு, ஆதார் அட்டைக்கு விண்ணப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல், சுகாதாரம் தொடர்பான சேவைகள், மின்சாரக் கட்டணம் செலுத்துவது போன்ற 300 க்கும் அதிகமான சேவைகளை வழங்கும் பொது சேவை மையமாக இந்த வேளாண் கடன் சங்கங்கள் செயல்படும். இதன் மூலமாக கிராமப்புற மக்கள் எளிதில் இந்த சேவைகளைப் பெற முடியும்.

நாட்டில் ஒட்டுமொத்தமாக 40,214 வேளாண் கடன் சங்கங்களும், தமிழகத்தில் 4,453 சங்கங்களும் இப்படி பொது சேவை வழங்கும் மையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

தமிழகத்தைப் பொருத்தவரை வேளாண் கடன் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றை கணினிமயப்படுத்த இந்த நிதியாண்டில் இது வரை 28.2 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு ஒதுகியுள்ளது.

இவ்வாறு அமைச்சர் அமித்ஷா பதிலளித்தார்.

### பென்னாகரத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த

# சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் - ரூ.3 இலட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ. 30–

தருமபுரி மாவட்டம், பென்னாகரம், அலகட்டு கிராமத்தில் விஷப்பாம்பு கடித்து உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி உள்வட்டம், வட்டுவனஅள்ளி வருவாய் கிராமத்திற்குட்பட்ட, அலகட்டு மலை கிராமத்தைச் சேர்ந்த ருத்ரப்பா – திருமதி.சிவலிங்கி தம்பதியரின் மகள் கஸ்தூரி (வயது 14) என்பவர் 28.11.2024 அன்று பிற்பகல் அவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் கீரை பறித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக விஷப்பாம்பு கடித்ததில், உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

மேலும், விஷப்பாம்பு கடித்து உயிரிழுந்த சிறுமியின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுமியின் பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டை மாநகரக் கழகம் சார்பில் நல உதவிகள் - பேரணி - கொடியேற்றல்!

## ஆ.செந்தில் தலைமை! கவிச்சுடர் கவிதைப் பித்தன் - வண்ணை அரங்கநாதன் - டாக்டர் வை.முத்துராஜா பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ.30 -

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை நகர் பகுதியில் உள்ள பத்து வட்டக் கழகங்களில் இருசக்கர வாகனங்களில் சுமார் 1000க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாகச் சென்றனர். மாநகரச் செயலாளர் செந்தில் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் ஆகியோர் அனைத்து இடங்களிலும் பொது மக்களுக்குஇனிப்புகள் வழங்கி இரு வர்ணக் கொடியை ஏற்றினார்கள். இதற்கு முன்னதாக துணை முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு நேச கரம் முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது மழை பெய்து கொண்டிருந்தாலும் கழக உடன்பிறப்புக்கள் உற்சாகமாக இரு சக்கர வாகன பேரணி நடத்தி உற்சாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேசக்கரம் முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கும் நிகழ்வினை அடுத்து 7,8,9,18,22,23,24, 25,37,38 ஆகிய வார்டுகளில் 11இடங்களில் மாநகர கழக செயலாளர் ஆ.செந்தில் தலைமையில் கழக நிர்வாகிகளுடன் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் ஆகியோர் இனிப்புகள் வழங்கி கழக கொடியினை ஏற்றி வைத்தார்கள். நிகழ்வுகளில் கழக இலக்கிய அணி துணைத் தலைவர்.கவிச்சுடர் கவிதைப் பித்தன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் வண்ணை அரங்கநாதன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை முத்துராஜா, மாவட்ட துணைச் செயலாளர் பி.ராஜேஸ்வரி, மாவட்ட பொருளாளர், துணை மேயர் மு.லியாகத் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப. சரவணன், சு.சண்முகம், பொதுக் குழு உறுப்பினர் என்.சாத்தையா, அ.ரத்தினம், எம். எம்.பாலு, செந்தாமரை பாலு, வி.என்.எம்.பாலு,

சி.அரங்கநாயகம், கவிவேந்தன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி,

மா.மணிவேலன், பா. ரெங்கராஜன், பழனிவேலு, சேட் (எ) ஷாஜகான், மு.க. அறிவுடை நம்பி, மு.ராஜதுரை, பிரேம் ஆனந்த், காதர் கனி, பிரசன்னா, எஸ்.செல்வம், ராமச்சந்திரன், க.செல்லையா, ம. ஆனந்த், சரவணன், நவீன் ஆண்டனி, ச.அருண்குமார், கதிரேசன், முத்துக்கருப்பன், ஆர்.எம்.சத்யா, மாலையீடு பிரபு, பால்ராஜ், மகேந்திரன், ராஜேந்திரன், திருவப்பூர் இளங்கோவன், செல்வராஜ், விஜயக்குமார், கண்மணி சுப்பு, எல்.ஐ சி ரமேஷ், தனபால், ஞானவேல், ஹரிகரன், மகேந்திரன் மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, வட்ட கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கட்சி தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெய்வேலி பொது மருத்துவமனையில் பிறந்த நான்கு பெண் குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களும் மருத்துவ உபகரணங்கள் அடங்கிய பெட்டிகளும் தலைமை பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. நகர கழக அவைத்தலைவர் நன்மாறபாண்டியன் தலைமையில் நகர கழக பொறுப்பாளர் குருநாதன், தொ.மு.ச. பொருளாளர் அய்யப்பன், மருத்துவர் ஞானசௌந்தரி ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். இந்நிகழ்ச்சியில் நகர கழக துணை செயலாளர்கள் செந்தமிழ்செல்வன், செந்தில்குமார், மாவட்டப் பிரதிநிதிகள் நாசர், இளங்கோ கிளைச் செயலாளர்கள் இராஜேந்திரன், ஜெயகுமார், கலைச்செல்வன், மணிகண்டன், தொமுச மருத்துவமனை பகுதி செயலாளர் நடராஜன், தகவல் தொழில்நுட்ப அணி மோகன், நகர இளைஞரணி துணை அமைப்பாளர் மோகன், நடராஜன், வெங்கட்ராமன் மருத்துவ அலுவலர்கள் கலந்து கொண்டர்.

### சென்னை மெட்ரோ ரயில்

# இரண்டாம் கட்ட திட்டப் பணிகள் 2027 டிசம்பரில் முடிவடையும்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்விக்கு, ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, நவ. 30-

டெல்லியில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது இக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் கலந்து கொண்டு, சென்னை மெட்ரோ ரயில் 2 ஆம் கட்டத் திட்டம் குறித்து கேள்வி எழுப்பினார்.

கூட்டத்தில், தமிழ்நாட்டில் சென்னை மெட்ரோ ரயில் 2 ஆம் கட்டத் திட்டத்தின் தற்போதைய நிலை கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் பணிகள் எப்போது நிறைவடையும். இத்திட்டத்திற்காக அரசு மேற்கொண்ட மொத்த செலவு மற்றும் திட்டத்தை கண்காணித்து உரிய நேரத்தில் முடிப்பதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ? என கேள்வி எழுப்பினார்.



இதற்கு பதில் அளித்து பேசிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சக ஒன்றிய அமைச்சர் டோகன் சாஹு, 118.9 கி.மீ பாதை நீளம் கொண்ட சென்னை மெட்ரோ 2 ஆம் கட்ட திட்டத்திற்கான தொகை ரூ. 63,246 கோடிகள் ஆகும். தற்போதைய பணிகள் 38.64% நிறைவடைந்துள்ளதாகவும், வரும் 2027 டிசம்பர் மாத இறுதியில் இப்பணிகள் முடிவடையும் என்றும் தெரிவித்தார்.

மேலும் ஒன்றிய அரசு மெட்ரோ திட்டங்களுக்கான நிதியை இத்திட்டத்தை செயல்படுத்தும் சிறப்பு நோக்க நிறுவனம் முன் வைக்கும் நிதி தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டத்தை சரியான நேரத்தில் முடிக்க தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது என பதிலளித்தார்.



கழக இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட இலுப்பநத்தம் ஊராட்சியில் கழக இரு வண்ணக் கொடியேற்றி அரசு நடுநிலைப்பள்ளியில் உள்ள அனைத்து மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் மற்றும் நோட்டு புத்தகங்களை தெற்கு ஒன்றிய செயலாளர் பி. ஜி. அழகுவேல் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கிளை கழகச் செயலாளர் முத்துசாமி, ஒன்றிய துணைச் செயலாளர் முருகேசன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணிவேல், சின்ன பையன் மாவட்ட பிரதிநிதி பெரியசாமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.